PR/2019/**

# Embassy of Japan

No. 20, Srimath R. G. Senanayake Mawatha, Colombo 7, Sri Lanka
TEL:94-11-269-3831~3, FAX : 94-11-269-8629
E-mail: cultujpn@sltnet.lk

July 17, 2019

PRESS RELEASE

## மனித வளங்கள் அபிவிருத்தி புலமைப்பரிசில் (JDS) திட்டத்துக்கு ஜப்பானிடமிருந்து ரூ. 429 மில்லியன் நன்கொடை

இலங்கையில் அரச துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் திறன் கட்டியெழுப்பலுக்காக முன்னெடுக்கப்படும் மனித வளங்கள் அபிவிருத்தி புலமைப்பரிசில் (JDS) திட்டத்துக்காக 429 மில்லியன் ரூபாயை ஜப்பானிய அரசு நன்கொடையாக வழங்கியுள்ளது.

263 மில்லியன் ஜப்பானிய யென்கள் (அண்ணளவாக ரூ. 429 மில்லியன்) நன்கொடையை பயன்படுத்தி, அரச துறையைச் சேர்ந்த இளம் நிறைவேற்று அதிகாரிகளுக்கு ஜப்பானிய பல்கலைக்கழகங்களில் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். இதனூடாக எதிர்காலத்தில் தமது துறைகளில் தேசிய தலைவர்களாக திகழ்வதற்கு, தமது திறன்களை கட்டியெழுப்பிக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத்திட்டத்தின் கீழ், 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மாஸ்டர் அல்லது PhD பட்டத்தை தொடர்வதற்காக 17 அரச துறை அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டு ஜப்பானுக்கு அனுப்பப்படுவார்கள்.

அவர்களின் பட்டப்படிப்பில், பொதுக் கொள்கை, பொது நிதி, பொருளாதாரம், வணிக முகாமைத்துவம், சூழல் முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்கள் உள்வாங்கப்படும். 2010 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது முதல், இலங்கையின் 137 அரச துறை அதிகாரிகளுக்கு JDS திட்டத்தினூடாக உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி திட்டத்துக்கான உடன்படிக்கை 2019 ஜுலை 17 ஆம் திகதி நிதி அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது. இதில் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி. ஆர்.எச்.எஸ்.சமரதுங்க மற்றும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகிரா சுகியாமா ஆகியோர் கைச்சாத்திட்டனர். (###)

************************************************************

Please contact the Development Cooperation Section for further information.

Tel: 011-269-3831~3 (ext.226)